**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தியவானிலைத் துறை**

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை**

**திருவாரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(18.12.2024 முதல் 22.12.2024)**

**அறிக்கை எண் 75/2024** **தேதி. 17.12.2024**

## திருவாரூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

திருவாரூர் மாவட்டத்தின் 13.12.24 முதல் 16.12.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 25 - 28 °செ ஆகவும் இரவு நேர வெப்பநிலை 22 - 24 °செ ஆகவும் காலை நேரகாற்றின் ஈரப்பதம் 96 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 83 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் வட கிழக்கு திசை வரை பதிவானது.

## எதிர்பார்க்கப்படும் வானிலை திருவாரூர் (14.12.2024 முதல் 18.12.2024)

| கடந்த வார வானிலை (13.12.2024 முதல் 16.12.2024) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 22.12.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 13/12 | நாள்-2 14/12 | நாள்-3 15/12 | நாள்-4 16/12 | தேதி | நாள்-1 18/12 | நாள்-2 19/12 | நாள்-3 20/12 | நாள்-4 21/12 | நாள்-5 22/12 |
| 66.6 | 81.5 | 3.5 | 0.0 | மழை (மி.மீ) | 28 | 25 | 28 | 8 | 10 |
| 26 | 25 | 27 | 28 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 28 | 28 | 28 | 27 | 27 |
| 24 | 23 | 24 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 22 | 22 | 22 | 23 | 23 |
| 6 | 6 | 6 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 6 | 6 | 6 |
| 96 | 85 | 86 | 78 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 88 | 88 | 88 | 85 | 85 |
| 80 | 83 | 78 | 78 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 75 | 75 | 75 | 78 | 78 |
| 4 | 4 | 4 | 4 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 8 | 8 | 8 | 6 | 6 |
| வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | காற்றுவீசும் திசை | தெற்கு | தெற்கு | தெற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு |

## திருவாரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 18.12.2024 முதல் 22.12.2024 ஆகிய தினங்களுக்கு லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 27 - 28 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 22 - 23 °செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 88 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 78 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 6 - 8 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | |
|---|---|
| **பொது** | மழையை கருத்தில் கொண்டு, நீர் பாசனம், உரமிடுதல் மற்றும் மருந்து தெளிப்பதை தள்ளிபோடவும். தண்ணீர் தேங்கும் வயல்களுக்கு தகுந்த வடிகால் செய்யவும். |
| | வடிகால் வாய்க்கால்களை பன்னை குட்டையுடன் முறையாக இணைத்து மழை நீரை எளிதாக வடிப்பதுடன் மழை நீரை சேமிக்கவும் முடியும். |

| | | |
|---|---|---|
| நெல் | | தண்ணீர் தேங்கியுள்ள பகுதிகளில் வடிகால் வசதியை அதிகப்படுத்தி, பயிர் மூழ்காதவாறு தேங்கியுள்ள நீரை வெளியேற்ற வேண்டும். பயிரின் நிலைக்கேற்ப ஊட்டச்சத்து நிர்வாகமும் மேற்கொள்ள வேண்டும். |
| | | தேங்கியுள்ள நீரை வடித்தவுடன், வரிசை நடவு மேற்கொண்ட வயல்களில் கோனோவீடர் அல்லது வீடர் கருவி மூலம் மண்ணில் காற்றோட்டத்தை ஏற்படுத்தி, வேர்கள் மண்ணில் உள்ள சத்துக்களை எடுத்துக்கொள்ள வழிவகை செய்ய வேண்டும். |
| **கால்நடைகள்** | **மாடு மற்றும் ஆடு** | கால்நடைகளை உயர்ந்த பாதுகாப்பான இடங்களுக்கு இடமாற்றம் செய்யவும். |

## குறுஞ்செய்தி

மழையை கருத்தில் கொண்டு, நீர் பாசனம், உரமிடுதல் மற்றும் மருந்து தெளிப்பதை தள்ளிபோடவும். தண்ணீர் தேங்கும் வயல்களுக்கு தகுந்த வடிகால் செய்யவும்.

**இயக்குநர்**